10th March 1958]

SRI M. KALYANASUNDARAM : அவர் போய்விட்டு வந்ததின் நோக்கம் என்ன? அவர் சர்க்காருக்கு ஏதாவது அறிக்கை கொடுத்திருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது நம் ராஜ்யத்தில் விவசாய படிப்பை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று யோசனை இருந்துவருகிறது. அதுபற்றி கவனிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்தக் காரியதரிசியும் ஒரு அங்கத்தினர். எக்ஸ்பர்ட் பார்க்கர் அவர்கள், சீப் ஆப் தி ஆக்ரிகல்சுரல் டெக்னிகல் கோவாப்பரேட்டிவ் மிஷன், அவரும் இந்தக் கமிட்டியில் அங்கத்தினராய் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பார்க்கர் அவர்களே குறிப்பிட்டார்கள். இதை நாம் முடிவு செய்வதற்கு முன்பு அமெரிக்காவிற்குச் சென்று விவசாயக் கல்லூரி பற்றி தெரிந்துகொண்டு வந்தால் நலம் என்று சொன்னார்கள். அதற்கு, ராக்பெல்லர் பௌண்டேஷன் உதவியும் கிடைத்தது. இந்த சர்க்காருக்கு செலவு ஒன்றும் இல்லை. ஆகவே அவர்கள் சென்றார்கள். அப்படி போய்வரும்படி, சீன தேசத்தின் அமைச்சர், இங்கு நம் நாட்டிற்கு வந்த அமைச்சர், பீப்பிள்ஸ் ரிப்பப்ளிக் ஆப் சைனா அமைச்சர் அவர்களும் அழைத்தார்கள். அவர்கள் செலவில்தான் போனோம். இவைகளைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது.

Law College hostel

* 270 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the students of the Law College in December 1957 for the construction of hostel for them in the City of Madras; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes Sir.

(*b*) The President of the Madras Law College Students' Representative Council, who submitted the memorandum signed by certain students of the Law College, has been informed that the question of locating the hostel for the students of the College in the building which is now used as the hostel for the men students of the Madras Medical College will be considered as soon as the men students of the Medical College vacate the premises and occupy the new hostel now under construction for them.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் எப்பொழுது நடவடிக்கை எடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில், ஆரம்ப நடவடிக்கை, மெட்றாஸ் மெடிகல் காலேஜுக்கு வேண்டிய ஒரு புதிய ஹாஸ்டல் கட்டுவது. அது துரிதமாக கட்டப்பட்டுவருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, whereas it is necessary to have the hostel attached to the college nearby and whereas the Madras Medical College Men's hostel is now in Kilpauk, will the Government think of the possibility of putting up a hostel in Esplanade grounds next to Madras Medical College Women's hostel that is now under construction?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal and there will be never any such proposal.

[10th March 1958

Sri M. P. SUBRAMANIAM: இப்பொழுது அரசாங்கம் செய்திருக்கிற ஏற்பாட்டின்படி, சட்டக் கல்லூரி மாணவர்கள் எத்தனை பேர்களுக்கு அந்த ஹாஸ்டலில் இடம் கிடைக்கும்? அதில்லாமல் தனியாக ஒரு விடுதி கட்டுவதற்கு அந்தப் பிள்ளைகள் கொடுக்கும் பணத்திலிருந்து அரசாங்கத்திற்கு எவ்வளவு மீதமாகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: தனியாக் இப்பொழுது சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு உத்தேசமில்லை. இந்த ஹாஸ்டல் எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்று பார்த்துக் கொண்டு அதற்குமேல் தேவையிருந்தால் வேறு கட்டிடம் கட்டலாமா அல்லது இருக்கக்கூடியதை வைத்துக்கொண்டு சமாளிக்கலாமா என்று பார்க்கலாம்.

Sri A. A. RASHEED: What is the present stage of the hostel for the Medical College women students?

The Hon. Sri C. SUBRAMANIAM: கட்டப்பட்டு வருகிறது.

Sri M. SOMASUNDARAM: மெடிகல் காலேஜில் படிக்கும் மாணவர்களில் சில பேர்கள் வெளியில் தங்குவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் எல்லோரையும் ஏன் அந்த ஹாஸ்டலில் வைக்கக்கூடாது?

Mr. SPEAKER: இது லா காலேஜைப் பற்றிய கேள்வியாகும்.

Sri K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that there is a vast space available next to Law College in Madras, which is now lying waste and which can be profitably utilized by constructing a hostel thereon, which would accommodate at the most about one hundred students?

The Hon. Sri C. SUBRAMANIAM: We should have some open spaces also, particularly within the congested area. I do not think it should be the policy of the Government to build up every vacant area inside the town.

Beggar home

* 271 *Q.*—**Sri P. G. MANICKAM:** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount given as grant by the Government to the Beggar Home in Coimbatore town in 1956–57; and

(*b*) the number of beggars maintained therein?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Rs. 1,200.

(*b*) Thirty.

Sri K. RAMASUBBU: இப்படி எல்லா மாவட்டங்களில் இருக்கும் தலைநகரங்களில் ஒரு விடுதி ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சில நகர சபைப் பிராந்தியங்களில் குறிப்பிட்ட சட்டத்தை அங்கு பிரயோகித்து இம்மாதிரி ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று யோசனை இருந்துவருகிறது. அவ்வாறு செய்யப்பட்டும் வருகிறது.

Sri P. G. MANICKAM: பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இவ்வாறு பிச்சைக்காரர் விடுதிகள் ஏற்படுத்துவதின் மூலம் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா? அதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறதா?